## இந்தியப் பொருளாதாரம்

## பகுதி - 1

## பொருளாதாரம் ஓர் அறிமுகம்

1. மனிதன் கண்ட முதல் தொழில் எது?

விடை: பயிர்த்தொழில்

2. எதனை வேளாண்மை தொழில் என்று அழைக்கிறோம்?

விடை: நாம் உண்ணும் அரிசி, கோதுமை போன்ற தானியங்கள் நிலத்தில் பயிரிடப்படுகின்றன. உழவர்கள் உற்பத்தி செய்கிறார்கள். இதனை வேளாண்மை தொழில் என்கிறோம்.

3. நாட்டு வருவாய் என்று எதனை அழைக்கிறோம்?

விடை: உழவர்கள், தொழிலாளர்கள், பணியாளர்கள் ஆகியோர் பங்காற்றி நாட்டின் வருமானத்தை பெருக்குகிறார்கள். எனவே தான் இதனை நாட்டு வருவாய் என்கிறோம்.

4. தனிநபர் வருமானம் என்றால் என்ன?

விடை: தனியாக ஒருவருக்கு மட்டும் கிடைக்கும் வருமனத்தை தனிநபர் வருமானம் என்கிறோம்.

5. எதனை பகிர்வு என்கிறோம்?

விடை: அரசு வழங்கும் உணவு, உடை, வீடு ஆகிய அடிப்படை வசதிகளை நாம் பகிர்வு என்கிறோம்.

6. பொருளாதாரத்தின் மூன்று அடிப்படைகள் யாவை?

விடை: உற்பத்தி, நுகர்ச்சி, பகிர்வு ஆகிய மூன்றும் பொருளாதாரத்தின் அடிப்படைகளாக அமைந்துள்ளன.

7. வாங்குவதும் விற்பதும் நடைபெறும் இடம் எவ்வாறு அழைக்கப் படுகிறது?

விடை: சந்தை.

8. மக்கள் பொருள்களை சந்தையில் வாங்கி தங்களின் தேவையை

**நிறைவு செய்வதனை நாம் எவ்வாறு அழைக்கிறோம்?**

விடை: நுகர்ச்சி

**9. வணிகம் என்பது என்ன?**

விடை: பொருள்களை வாங்கி விற்பதற்கு வணிகம் என்று பெயர்.

**10. யாரை வணிகர்கள் என்கிறோம்?**

விடை: வணிகத்தொழிலில் ஈடுபடுபவர்களை வணிகர்கள் என்கிறோம்.

**11. யாரை பெருவணிகர்கள் என்கிறோம்?**

விடை: பொருள்களை மொத்தமாக வாங்கி விற்பவர்களை பெருவணிகர்கள் என்கிறோம்.

**12. யாரை சிறுவணிகர் (அ) வியாபாரி என்கிறோம்?**

விடை: பொருள்களை சிறிய அளவில் வாங்கி விற்பவர் சிறுவணிகர் (அ) வியாபாரி என்கிறோம்.

**13. பொருளாதார வளர்ச்சி என்று எதனை அழைக்கிறோம்?**

விடை: தேவைகள் பெருகப்பெருக உற்பத்தி, நுகர்ச்சி, பகிர்வு நடவடிக்கைகளும் பெருகிக் கொண்டே செல்கின்றன. எனவே இதனை பொருளாதர வளர்ச்சி என்று அழைக்கிறோம்.

**14. நம் நாட்டில் பொருளாதாரத்திற்காக நோபல் பரிசு பெற்ற அறிஞர் யார்?**

விடை: அமர்த்தியாசென்.

**15. சந்தையில் எப்பொது பொருள்களின் விலை அதிகரிக்கிறது?**

விடை: பொருள்களுக்கு பற்றாக்குறை ஏற்படும்போது விலை அதிகரிக்கிறது.

**16. எப்பொது சந்தையில் பொருள்களின் விலை குறைகிறது?**

விடை: சந்தையில் சில பொருள்கள் அதிகமாக குவியும்போது பொருள்களின் விலை குறைகிறது.

## பகுதி - 2

## உற்பத்தி காரணிகள்

1. பொருளியலின் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?

விடை: ஆடம்ஸ்மித்

2. பொருளியல் என்பது செல்வத்தைப் பற்றிய அறிவியல் என்று வரையறுத்தவர் யார்?

விடை: ஆடம்ஸ்மித்.

3. ஆடம்ஸ்மித் வெளியிட்ட புத்தகம் - நாடுகளின் செல்வம்.

4. எதைப்பொறுத்து ஒரு நாட்டின் நாட்டு வருமானம் அமையும்?

விடை: பண்டங்கள், பணிகளின் உற்பத்தியைப் பொறுத்து ஒரு நாட்டின் நாட்டு வருமானம் அமையும்.

5. பெறப்பட்ட காரணிகள் எனப்படுபவை யாவை?

விடை: மூலதனமும் தொழில் அமைப்பும்.

6. எவற்றை உற்பத்தி காரணிகள் என்று அழைக்கிறோம்?

விடை: நிலம், உழைப்பு, மூலதனம் மற்றும் தொழில் அமைப்பு ஆகியவை பண்டங்களும் பணிகளும் உற்பத்தி செய்ய பயன்படுகின்றன. அவை உற்பத்தி காரணிகள் எனப்படுகின்றன.

7. உற்பத்தி காரணியான நிலத்திற்கு அளிக்கப்படும் வெகுமதி எவ்வாறு அழைக்கப்படுகிறது?

விடை: வாரம் (வாடகை)

8.

| உற்பத்தி காரணி | வெகுமதி |
|---|---|
| (அ) நிலம் | வாரம் |
| (ஆ) உழைப்பு | கூலி |
| (இ) மூலதனம் | வட்டி |

(ஈ) தொழில் அமைப்பு லாபம்

9. உழைப்பு என்றால் என்ன?

விடை: ஊதியத்திற்கு செய்யப்படும் எந்த ஒரு வேலையும் உழைப்பு ஆகும். அந்த உழைப்பு உடல் (அ) மன உழைப்பாகவோ இருக்கலாம்.

எ.கா: சமையல்காரியின் உழைப்பு உடல் உழைப்பு ஆகும். ஒரு ஆசிரியரின் உழைப்பு மன உழைப்பு ஆகும். உழைப்பிற்கு அளிக்கப்படும் வெகுமதி கூலி.

10. உழைப்பின் சிறப்பியல்புகள் யாவை?

விடை: உழைப்பு அழியக்கூடியது, உழைப்பு பிரிக்க இயலாதது. உழைப்பு மனிதனுக்கு மனிதன் வேறுபடும். உழைப்பு இடம்பெயரக்கூடியது. தனி உழைப்பளிகளின் பேரம்பேசும் ஆற்றல் குறைவு.

11. ஆடம்ஸ்மித் வேலைப்பளுவிற்கு உதாரணமாகக் கூறுவது என்ன?

விடை: ஆடம்ஸ்மித் தனது நாடுகளின் சம்பவம் என்னும் நூலில் குண்டூசி தயாரிப்பதை உதாரணமாகக் கூறியுள்ளார்.

12. மூலதனத்தின் வகைகள் யாவை?

விடை: (அ) பருமப்பொருள் மூலதனம்

(ஆ) பண மூலதனம்

(இ) மனித மூலதனம்

13. தொழில் முனைவோர் எவ்வாறு அழைக்கப்படுகிறார்?

விடை: சமுதாய மாற்றம் காணும் முனைவோர் என்று அழைக்கப்படுகிறார்.

14. உற்பத்தி சங்கிலி என்றால் என்ன?

விடை: தொழிற்சாலை பணியாளர்கள் பண்டங்களை உற்பத்தி செய்கிறார்கள். மருத்துவர்கள், வங்கிப்பணியாளர்கள், ஆசிரியர்கள், போக்குவரத்துத் துறை தொழிளாலர்கள் தங்கள் பணிகளை செய்கிறார்கள்.பொருளாதார நடவடிக்கையின் சக்கரம் சுழன்று கொண்டு இருக்கிறது. இவ்வாறு பண்டங்கள் பணிகளின் இயக்கம் முதன்மை,

இரண்டாம் மற்றும் சார்புத்துறை மூலமாக செயல்படுவது உற்பத்தி சங்கிலி எனப்படுகிறது.

15. இந்தியவின் முக்கியத்தொழிலாகக் கருதப்படுவது எது?

விடை: விவசாயத்தொழில்

16. கப்பல் கட்டும் தொழிற்சாலை எந்தத்துறையைச் சார்ந்தது?

விடை: இரண்டாம் துறை

17. அமெரிக்கவில் எத்தனை சதவீத மக்கள் சார்புத்துறை தொழிலளர்கள்?

விடை: 80 சதவீதம்

18. சேவைத்துறை என்று எந்தத் துறை அழைக்கப்படுகிறது?

விடை: சார்புத்துறை

19. மனிதனின் பலவிதமன தொழில்களை எத்தனை துறைகளாகப் பிரிக்கலாம்?

விடை: மூன்று துறைகள். அவை முதன்மை, இரண்டாம் மற்றும் சார்புத்துறை

## பகுதி - 3

## பணம், சேமிப்பு மற்றும் முதலீடு

1. பணம் மட்டுமே பணத்தின் தேவையை சந்திக்கும் இது யாருடைய கூற்று?

விடை: பொருளாதார பேராசிரியர் வாக்கர்

2. இடையீட்டுக்கருவி என்றால் என்ன?

விடை: பணம் (பணத்தைக் கொடுப்பது)

3. இலத்தீன் மொழியில் பணத்திற்கு என்ன் பெயர்?

விடை: மானட்டா (மானட்டா என்பது ரோமானிய பெண் கடவுள் ஜெனட்டோ)

4. பணத்தின் ஆங்கில வார்த்தை எங்கிருந்து பெறப்பட்டது?

விடை: பணத்தின் ஆங்கில வார்த்தை மானட்டா விலிருந்து மருவியது ஆகும்.

5. பணத்தின் முக்கிய 4 செயல்பாடுகள் யாவை?

விடை: பணம் ஒரு இடையீட்டுக்கருவி, மதிப்பின் அளவுகோல், மதிப்பின் விலைகலன், எதிர்கால செலுத்துகை.

6. பணத்தேவையின் முக்கியத்துவத்தை நாம் எப்போது முழுமையாக உணர முடியும்?

விடை: பணத்தட்டுப்பாடு இருக்கும்போது

7. சேமிப்பு என்றால் என்ன?

விடை: நம்முடைய பணத்தில் செலவழிக்காமல் இருக்கும் பகுதியே சேமிப்பு என்கிறோம்.

8. முதலீடு என்றால் என்ன?

விடை: அதிக உற்பத்திக்கான பொருளின் சேர்ப்பு ஆகும்.

## பகுதி - 4

## தேவையும் அளிப்பும்

1. பொருளியலில் தேவை என்றால் என்ன?

விடை: வாங்கும் சக்தியுடன் கூடிய விருப்பமே பொருளியலின் தேவை எனப்படும்.

2. யாரை நுகர்வோர் என்கிறோம்?

விடை: தேவை என்பது பொருளை வாங்கும் மக்களிடமிருந்து எழுவதாகும். அவர்கள் நுகர்வோர் எனப்படுவர்.

3. அளிப்பு என்றால் என்ன?

விடை: அளிப்பு உற்பத்தியாளர்களிடமிருந்து எழுகிறது. ஒரு குறிப்பிட்ட விலையில் விற்பனைக்கு அளிக்கப்படும் பண்டத்தின் அளவே அளிப்பு

எனப்படும்.

4. ஒரு விற்பனையாளர் ஒரு குறிப்பிட்ட விலையில் எந்த அளவு பண்டத்தை விற்பனைக்கு அளிக்க நினைக்கிறாரோ அதுவே அளிப்பு எனப்படும்.

**5. தேவையைப் போலவே அளிப்பும் எதனைச் சார்ந்துள்ளது?**

விடை: விலையை சார்ந்துள்ளது.

**6. அளிப்பை பாதிக்கக்கூடிய காரணிகள் யாவை?**

விடை: உற்பத்தி தொழில் நுட்பம், காரணிகளின் விலை, பிற பண்டங்களின் விலைகள், நிறுவனங்களின் எண்ணிக்கை, வருங்கால விலை பற்றிய எதிர்பார்ப்புகள், வரிகள் மற்றும் சலுகைகள்,பொருளாதாரம் சாராத காரணிகள்.

**7. தேவை விதி என்றால் என்ன?**

விடை: விலை உயர்ந்தால் தேவை குறையும், விலை குறைந்தால் தேவை உயரும். விலைக்கும் தேவைக்கும் இடையே உள்ள தலைகீழ் தொடர்பே தேவை விதி விளக்குகிறது.

**8.மார்சலின் தேவை விதி என்ன?**

விடை: ஆல்பிரடு மார்சலின் கூற்றுப்படி, நிறைய பண்டங்களை விற்க வேண்டுமாயின் விலை குறைவாக இருக்க வேண்டும். அவ்வாறு விலை குறைவாக இருந்தால் தான் அப்பண்டத்தைப் பலரும் வாங்குவர். வேறு விதமாகக் கூறினால் விலை குறைவதால் தேவைப்படும் பண்டத்தின் அளவு கூடுகிறது. விலை கூடுவதால் தேவை குறைகிறது.

**9. தேவை விதி பொருந்தாத பண்டங்கள் யாவை?**

விடை: அரிசி போன்ற அடிப்படைப் பண்டங்களுக்கும், வைர ஆபணங்கள் போன்ற ஆடம்பரப் பண்டங்களுக்கும் இவ்விதி பொருந்தாது. இப்பண்டங்களுக்கான் விலை உயரும் போது தேவை உயரும். விலை குறைய தேவையும் குறையும்.

**10. அளிப்பு என்றால் என்ன?**

விடை: மற்றவை மாறாத நிலையில் ஒரு பண்டத்தின் விலை

உயர்ந்ததால் அளிப்பும் அதிகரிக்கும். அதேசமயம் விலை குறைந்ததால் அளிப்பும் குறையும்.

## பகுதி - 5

## சமநிலை விலை

**1. சமநிலை விலை என்றால் என்ன?**

விடை: ஒரு குறிப்பிட்ட விலையில் தேவைப்படும் பண்டத்தின் அளவும் அளிக்கப்படும் பண்டத்தின் அளவும் சமமாகும். இந்த விலையில் வாங்கப்படும் அளவும் தேவை விற்கப்படும் அளவும் சமமாகும். இவ்விலையே சமநிலை விலை எனப்படும்.

புகழ்பெற்ற பொருளாதார நிபுணரான ஆல்பிரட் மார்சல் சமநிலை விலையில் காலத்தின் பங்கினை விளக்கியுள்ளார்.

**2 ஆல்பிரட் மார்சல் காலத்தை எத்தனை வகையாக வகைப்படுத்தியுள்ளார்?**

விடை: மூன்று வகை.

(அ) அங்காடிக்கலம் (அ) மிகக் குறுகிய காலம்

(ஆ) குறுகியகாலம்

(இ) நீண்ட காலம்

**3. குறுகிய காலம் என்றால் என்ன?**

விடை: தேவை மாற்றத்திற்கேற்ப அளிப்பை ஓரளவு மாற்றியமைக்க இயலும் காலம்.

**4. நீண்ட காலம் என்றால் என்ன?**

விடை: தேவை மாற்றத்தை முழுமையாக அளிப்பு மாற்றத்தால் சந்திக்க இயலும் காலம்.

**5. அங்காடிக்கலம் (அ) மிகக் குறுகிய காலம் என்றால் என்ன?**

விடை: தேவை மாற்றத்திற்கேற்ப அளிப்பை மாற்ற முடியாத காலம்